1256

ஓம்.

முருகபிரான் முன்னிற்க.

# ஜீவகாருண்யக்கீதம்.

முதற்பாகம்.

3 SEP 1932



...கனன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1932. [விலை சதம் 10

...ஜுளி ஜரோட், மதராஸ்.

Q2:417
N32
149662

ஓம்.

முருகபிரான் முன்னிற்க.

# ஜீவகாருண்யக் கீதம்.

முதற் பாகம்.



3 - SEP 1932

முதற்பதிப்பு.

இஃது, சேது ராமநாதபுரம் ஜமீன்

தென்னவனூர் பாலகவி, கோபாலதிலக

R. S. பெரியாம்பிள்ளை அவர்கள்

எழுதியது

மஸ்கேலியா புஸ்தக வியாபாரம்,

ஜனாப் M. ஷேக் அப்துல் காதர் சாகிப்

அவர்களால்,

ஸ்ரீ மயில்வாகனன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

காபி ரைட்] 1932. [விலை சதம் 10

நெ-2, சூளை ஹைரோட், மதராஸ்.

உ

இன்னூல் ஆசிரியர்பேரில்

கோட்டாறு. "மதுராகவி"

# சோ. சிவகாமி நாதனவர்கள்

எழுதிய,

## சாற்றுக்கவி.

உலகமதில் உலுத்தர்களால் உணர்வின்றிப் பலி
  செய்யும், உயிர்கள் தன்பால்
பலகவியாய் பண்ணிசைத்துப் போர்மகிழப் பகர்த்த
  னனும் பால கோபால
திலகமதாய் வந்துதித்தோன் தென்னவனூர் கிரா
  மமதின் தீரனாகும்
பாலகவி பெரியாம்பிள்ளை தமிழ்ப் பாவணியும்
  பண்பாய் மாதோ.

2063

784.0954

Q2:417
1182

# முகவுரை.

எமது நண்பர் தென்னவனூர். பாலகவி" R. S. பெரியாம்பிள்ளையவர்கள் எழுதிய இன்னூல் சைவ சமயத்தவர் என சொல்லித் திரியும் சிற்சில போலிச் சண்டாளர்களாம் துன்மார்க்கர்களுக்கு புத்தியைப் புகட்டும் சிறந்த அவுடதம் என்பதே எனது உட்கருத்து இந்நூலை நம் தமிழகம் நன்கு வரவேற்று ஆதரிப்பதுடன் இதுபோன் பல சிறு நூற்களை எழுதும் வண்ணமும் உற்சாக மூட்டு மாறு வேண்டுவதோடு எல்லாம்வல்ல இறைவனும் கருணாகரக் கந்தவேளும் கடாக்ஷித்தருவாராகவும்.

இப்படிக்கு,

வரகவி. K. S. குளத்துவையர், கண்டி.

ஓம்.

# ஜீவகாருண்யக் கீதம்.

விநாயகர் துதி.

சித்தர்தவயோகிகளும் செப்பும்பிரணவத்தின்
கர்த்தனே ஞானக் கணபதியே - இத்தரையில்
ஜீவகாருண்யமெனும் செஞ்சொற்கவியிதற்கு
ஆவலாய்வந்துன் னருளீ.

குமரன் துதி.

கந்தமாதனம்வாழ் செந்திவேல்க்குமரன்
கருணைபூண் டொழுகிடும் கதிரை
கந்தவேள்கருணை கழலடிபணிந்து
கர்த்தனே சண்முகாவென்று
கந்தவாசனைசேர் மல்லிகைமுல்லை
களபகஸ்தூரியும் சாற்றித்தினம்
கந்தனேமுருகா வெனத்தொழுவோர்க்கு
கனவிலும்நமன்பய மிலையே.

பண்டிதமோதிலாலை பரிகொடுத்தோமே என்ற மெட்டு.

பல்லவி.

பக்தர்களே ஆடுகோழி பலியிடலாமா
பலியிடலாமா பாவம் உமைவிட்டுப்போமா ப

அநுபல்லவி.

சித்தர்தவயோகிகளும் உத்தமதியாகிகளும்
பக்தியுடன்போற்றிசெய்யும் பரமன்சந்நதியில்
பரமன்சன்னதியில் முத்து குமரன்முன்னிலையில்

தொஹைபரா.

தொல்லுலகில் உங்கள்தாய் பெண்டீரும்
சுற்றமும் சுகித்தின்பமாக வாழ
நல்லுயிராம் மாடாடு கோழிமரை மான்களும்
நானிலம் தன்னில் மாள
கொல்லுவது உங்கட்கு தர்மமா நீதியா
கொடும்பாவச் செய்கை யான
அல்லலாம் இந்ததுர்ப் பழக்கத்தை
விடுத்துநீர் சைவரெனத் திகழுவீரே.

பாட்டு.

சத்யநெறிபெருகிடவேசமயமெலாம்புகழ்ந்திடவே
நித்தியம்ஜீவகாருண்யம் நிலைத்துவாழ்கவே
நிலைத்துவாழ்கவே சைவம் தழைத்துவாழ்கவே ப
சங்கிலிமாடன்முனியும் சத்திமதுரைவீரனும்
உங்களிடம்ஆடுகோழி தன்உயிரைகேட்டாரா
உயிரைகேட்டாரா லெட்டர் மெயிலில்போட்டாரா

தொகையரு.

தன் னுயிர்போல் மன் னுயிரை
என் னுவதுதர்மமென சாற்றும்வாக்கியம்
புண்ணியமாம் இவ்விஷயம்
தெரிந்திருந்தும் இக்கொலைகள்புரியலாமா
எண்ணிநீர் யோசிப்பீர்
இது முறையாயிதுதகுமா இந்துதர்மக்
கன்னியரே கருணாகரனும் கடவுளரும்
பொறுப்பாரா கண்டுகூறும்.

பாட்டு.

இந்தவிதப்பழியாலுங்கள்சந்ததியுங்கெட்டுநீங்கள்
சிந்தைகெட்டு வீணாகவே சீரழிவீரே
சீரழிவீரே - இந்த - பாரினில்நீரே ப

அம்பிகை சந்நிதானத்தில்
ஆடுகோழி வெட்டுவதால்
எம்பிரான் உங்கள்குலத்திற்
கிடுக்கண் செய்திடுவார்
இடுக்கண் செய்திடுவார் சாபம்
அடுக்காய் தந்திடுவார் ப

கொல்லாவிரதம் பூண்டோர்
நல்லோர்கள் என்றுமுன்னோர்
சொல்லல் படித்திருந்தும்
துடிக்கக் கொல்லலாமா
துடிக்கக்கொல்லலாமா உயிர்
மடிப்பதும் தர்மமா ப

தொகையறு.

தவமகிமை தனைக்கடந்த யோகியான
தாயுமான சுவாமிகளும் சமயவேதக்
குகனருள்சேர் அருணகிரி பட்டினத்தார்
கும்பமுனி நக்கீரர் மூத்துலிங்கர்
இகபரத்துக் கருந்துணையாய் திருக்குறளை
எடுத்துரைத்தோன் இலங்குஞான
சுகமான முத்திபெற்ற நாதாக்கள்
இக்கொலைகள் செய்ததுண்டோ.

பாட்டு.

செந்தேனபிஷேகவஸ்து சந்தனம்தாம்பூலம்வைத்து
இந்த ஆடுகோழிரத்தம் எங்குவைப்பீரே
எங்குவைப்பீரே பழி தங்கிநிற்பீரே ப
பக்தன் பெரியாம்பிள்ளைசொல் பாடியேயிந்தஉலகில்
உத்தமசைவசமயம் உலகில்மேன்மைபெறும்
உலகில்மேன்மைபெறும் நமது உயிர்கள்நன்மைபெறும் பக்

சரி சரி என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அடுக்குமா அடுக்குமா ஆலயத்தில் பலியிடுவது

அநுபல்லவி.

துடுக்காகவே ஆடுகோழியை
அடுக்காகவே வெட்டிக்கொல்வது அ

சரணம்.

1 மந்தைக் கறுப்பன்சோனே
சங்கிலிமாடன் மதுரைவீரனும்
சங்கமதுரை யொட்டைக்கோபுரம்
தங்கிடும்முனி தீரனும்
சத்திமாரியும் உமை பத்திரகாளியும்
தங்கும்கோவிலில் இந்தப்பழிகள்
எங்கும்செய்வது இந்துமதத்திற்கு அ

2 அங்கம்நிறையத் திருநீறணிந்து
ஆலயங்களில் சென்றுமே
உங்களுக்கொரு இடுக்கணும்செய்யா
வுயிர்ப்பிராணியை கொன்றுமே
சூட்டான்கள்ஜாடி சாமி ஆட்டமும்ஆடி
தொல்லுலகினில் ஆலயத்திலே
அல்லும்பகலும் பலியிடுவது அ

3 செந்திக்குமரன் வெற்றிக்கொடியை
தினமும்கொல்வது தர்மமா
செந்தீக்கடவுள் வாகனமதில்
சிந்தும்ரத்தம் வீண்போகுமா
ஜீவகாருண்யம்வைத்தால் சிறக்குமேபுண்யம்
தெரியாமலே ஆலயந்தனில்
பழிசெய்வது தர்மநீதிக்கு அ

4 உங்கள்மக்களும் மனைவி சுற்றமும்
உலகில்வாழவும் கியாதியா
தங்களுக்கொரு இடுக்கணும்செய்யா
உயிரைகொல்வது நீதியா
யோசித்துப்பார்ப்பீர் நூல் வாசித்துபார்ப்பீர் இதை
உணராமலே கோவில்கள்தோறும்
கனகோழிகள் பலியிடுவது அ

5 புண்ணியமாகிய இந்துமதத்திற்கு
பொருந்துமா விதுதிருந்துமா
தண்ணீரை ஆடுகள்கோழிமீதூற்றியே
தலையைவெட்டிடலாகுமா
தர்மமீதாமா இந்த கர்மம் வீண்போமா
கருணகரா திருமாதுமை
மகமாரிமுன் பலியிடுவது அ

6 மட்டிப்பயல்கள் சாமிவந்ததென்று
மயங்கியே நின்ருடியே
புட்டிநிறைய சாராயம்வைத்து
பூஜைக்கு கிடாஜோடியே
வெட்டடாஎன்று அவன் விளம்பவேநின்று நீவிர்
விரைவாகவே ஆடுவெட்டியித்
தரைமீதினில் உதிரம்சிந்துவது அ

7 பொங்கலிட்டுமே எங்களைவெட்ட
போகிருர் இந்தமூடர்கள்

சங்கராஉனக் கபயமென்றுமே
சத்தம்போடு மாடாடுகள்
ஆகையினாலே இதை அறிந்தினிமேலே
அருளோங்கிய ஆலயந்தனில்
ஒருபோதுமே உயிர்வதைசெய்வது அ

8 மங்களம்பெறும் சைவசமய
மார்க்கநெறியின் சிலாக்கியமே
தங்கிடும் பெரியாம்பிள்ளைகூறும்
தமிழைக்கேட்க யோக்யமே
தர்மகீதமே இந்து சமயவேதமே கண்ட
தனவான்களே கனவான்களே
அனியாயமாய் பலியிடுவது அ

சுருளிமலே மீதுமேவும் சீலா என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1 வாமிசிவ காமியருள் பாலா இந்த
பூமிபுக ழுங்கதிரை வேலா உந்தன்
பொற்பத மெனக்ருள்வபய் கற்பூர தீபத்தினலங்
காரா மயில் வீரா வா

2 சாகரஞ் சூழிப்புவியின்மீது துக்க
சாகரத்தி னுல்வருந்தும் போது சிவ
சண்முகனே பன்னிருகை புண்ணியனே என்றழைக்க
வாரும் துயர் தீரும் வா

3 மண்டலத்தில் ஜோதிமிகும் கந்தா சிந்து
மண்டிடு மண்ணுமலைக் குகந்தாய் மாய
பந்தபாசத் தால்மிகவும் நொந்துமே வருந்துமென்
வருவாய் அருள் தருவாய் வா

4 செந்தமிழ் பெரியாம்பிள்ளை பாட்டு ஞான
கந்தனைமகிழ்ந்துன்னருள்நாட்டு தோகை
மந்தகாச மாமயின்மீ திந்தவேளை வந்தருள்செய்
கந்தா அரன் மைந்தா வா

ஜீவகாருணய கீதம்,
முதற்பாகம் முற்றும்.

---




அன்புடையீர்?
பொய்வேட தாரிகளின் புதுமைசிந்து
1-2-பாகம் வெளி வந்துவிட்டது.

கிடைக்குமிடம்:—
சரஸ்வதி புக் டிபோ,
நெ-63. ஜிந்துப்பிட்டி தெரு, கொழும்பு.

# விளம்பரம்.

சங்கீதப் பிரியர்கட்கு ஓர் அருந்தருணம்.

கோட்டாறு. "மதுரகவி" சோ. சிவகாமி நாதன் அவர்கள் எழுதிய தேசீய பாட்டுகள், தோத்திரக்கீர்த்தனைகள் பஜன்பாட்டுகள், முதலியன எம்மிடம் புதுப் பதிப்புகளாய் இருக்கின்றன.

ஆனந்தகானம்.
அமிர்தகானம்.
கதிர்காம தோத்திரக்கீர்த்தனை.
கண்ணன் பக்திரசக்கீதம்.
சுதந்தரமுரசு.
சுதந்தரப்பறை.
பகத்சிங் பரிதாபக்கீதம்.
சுதேசகீதம்.
சமதரும முழக்கம்.
விடுதலைப்பறை.
ஆஷாடபூதிகளின் அற்புதச்சிந்து.
பார்ப்பனர்படுமோசக்களஞ்சியம், முதலியன.

இன்னும் வேண்டிய புஸ்தகங்கள் படங்கள், நாவல்கள், தாருல்இஸ்லாம், பதிப்பு புத்தகங்கள், சகாயமாக நேரிலும், வி. பி. மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

எமது விலாசம்:
M. ஷேக் அப்துல்காதர் சாகிப்,
புத்தக வியாபாரம், மஸ்கெலியா, சிலோன்.

அறிவித்தல்.

# ஸ்ரீ கணேச ஹோட்டல்.

## கதிர்காமம்.

குகனையச் செல்வர்காள்! கதிர்காமயாத்திரை செய்யும் அன்பர்களுக்கு வேண்டிய பலவித சௌகரியங்களும், சாப்பாடு சிற்றுண்டி முதலியனவும், எமது ஹோட்டலில் செய்து கொடுக்கப்படும். நமது கணேச ஹோட்டல் கதிர்காமத்தில் சுமார் 10-வருட காலமாக ஆடி உற்சவ காலங்களில் நடந்துவருவது அன்பர்கள் அறிந்த விஷயம். சென்ற வருடங்களைவிட விசேஷ வசதிகள்செய்து கொடுக்கப்படும். அன்பர்கள் எப்பொழுதும்போல் வந்து எம்மை யாதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். சாக்ஷாத் முருகபிரான் அருள் புரிவாளுகவும்.

இங்ஙனம்:
மானேஜர்,
ஸ்ரீ கணேச ஹோட்டல் கதிர்காமம்.